செ.வெ.எண்: 326 நாள்: 25.4.2020

**தாட்கோ மூலம் 2008 ஆம் ஆண்டில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள தூய்மை பணிபுரிவோர்கள் கொரோனா நிவாரண உதவிகளை பெற்று பயன் பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தாட்கோ மூலம் 2008 ஆம் ஆண்டில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள தூய்மை பணிபுரிவோர்கள் கொரோனா நிவாரண உதவிகளை பெற்று பயன் பெறலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தூய்மை பணிபுரிவோர் நல வாரியம் மூலமாக 2008 ஆம் ஆண்டில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்த தூய்மை பணிபுரிவோருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையை வைத்திருப்போர் தற்போது பணிபுரிந்தாலும், ஓய்வு பெற்று இருந்தாலும் அதன் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவிகளை பெற்று பயன் பெறுவதற்கு ஏதுவாக தாட்கோ மாவட்ட மேலாளர் dmpdktahdco@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கோ அல்லது 04322 221487 என்ற தொலைபேசி எண்ணிலோ, 94450 29471 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட மின்னஞ்சலில் தங்கள் அடையாள அட்டையின் விவரத்தை படம் எடுத்து அனுப்பலாம் அல்லது குறுஞ்செய்தி அனுப்பிடலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**